1973 மார்ச் 14]

*Diamond Crown for Goddess **Meenakshi**, **Madurai**.*

*370 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a New Diamond Crown has been provided for Goddess Meenakshi Amman at Madurai; and

(*b*) if so, tne details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ரூ. 14 லட்சம் மதிப்புள்ள வைரக் கிரீடம் ஒன்று திருப்பணிக் குழுவினராலும், ரூ. 2 லட்சம் மதிப்புள்ள தங்கக் கவசம் ஒன்று மதுரை மீனுட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுவாலும், பொது மக்களிடமிருந்தும், கோயிலிலிருந்தும் வசூலான நன்கொடையால் செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன வேலைகள் முடிவடைந்து அவ்வாபரணங்கள் தெய்வத்திற்கு 11—12—1972 அன்று அணிவிக்கப்பட்டன.

திரு ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பெரிய கோயில்களிலேயெல்லாம் வருமானத்தைச் சேர்த்து ஒரே இடத்திலே குவித்துக்கொள்கின்ற அந்த முறையை மாற்றி, அனுதை விடுதி, கல்லூரி, மருத்துவமனை போன்றவற்றிற்கு ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர் கோவில் வருமானத்திலிருந்து நிதியை ஒதுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்த வைரக்கிரீடம், கவசம் செய்தது கோவில் வருமானத்திலிருந்து செய்ய வில்லை. தனிப்பட்ட முறையிலே பக்தர்கள் கொடுத்த காணிக்கையி லிருந்து செய்து இருக்கிருர்கள். செய்தது போக மீதியிருந்தால் மற்றக் காரியங்களுக்குச் செய்கிருேம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மதுரை மீனுட்சியம்மன் கோவிலுக்குச் செல்கின்றவர்கள், வைரக் கிரீடத்தையும், வைர மூக்குத்தியையும், வைரத் தோடையும் பார்த்துவிட்டு, அதைப்போன்று நமக்குக் கிடைக்கவில்லையே என்று நினைத்துக்கொண்டு கோவிலிலிருந்து வீட்டிற்குச் சென்றவுடன் வீட்டிலே சண்டைபோடுகிருர்கள். எனவே, ஆண்டவனுக்கு இதுபோன்ற அணிகலன்கள் போடுவதை நிறுத்துவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களின் துணைவியாரை மதுரை மீனுட்சியம்மன் கோவிலுக்கு அனுப்பாமல் இருப்பது நல்லது.

திரு. எ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஆண்டவன் ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர் என்று கூறப்படுகிறது நாத்திகர்களால்..........

[1973 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பெண் தெய்வம் பற்றிய வினா.

திரு. ஏ. எம். இராஜா : அப்படிப்பட்ட ஆண்டவனுக்கு 10 லட்சம் ரூபாயைக் கொண்டுபோய்ப் போட்டு நகைகளாகப் போடுகிறோம். ஒரு தனிப்பட்டவர் 40 பவுனுக்குமேல் வைத்துக்கொள்ளக்கூடாது, குறைவாகத்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆகவே ஆண்டவனுக்கும் அந்தச் சட்டத்தைக்கொண்டுவந்து இவ்வளவுதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று உச்சவரம்புகொண்டுவந்து, அந்தப் பணத்தையெல்லாம் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆண்டவனேகூட 10, 20 லட்சம் ரூபாயில் வைரக்கிரீடம் செய்வதை விரும்ப மாட்டார் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டத்தால் அதைத் தடுக்க முடியாதா என்று கேட்டார்கள். இப்பொழுது சட்டத்தால் தடுக்கிற சூழ்நிலை இல்லை. சட்டங்களும் அதற்குக் கிடையாது. சமுதாயத்தின் நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அறங்காவலர்கள் நிறைய வருகிற பணத்தை, ஆண்டவனும் திருப்தியடைகிற முறையிலே, மதுரை மீனாட்சியம்மன் மனம் குளிரத் தக்க வகையிலே ஏழை எளியவர்கள் நல்வாழ்விற்கான காரியங்களைச் செய்யலாம் என்று அவர்கள் யோசித்து இருக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய பாதுகாப்பிற்கும், மற்றும் சில நாட்டின் நல்ல காரியங்களுக்காகவும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து அதிகப்படியாக தங்கம் கிடைத்து இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாட்டினுடைய பாதுகாப்பிற்காக மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து நிறைய தங்கம் கொடுத்திருக்கலாம். இப்பொழுது கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லை. ஆனால் சென்ற யுத்தத்தின்போது 1965 ஆம் ஆண்டிலே கொடுத்ததாக எனக்கு நினைவு. மதுரை மீனாட்சியம்மனேகூட இப்படிப்பட்ட ஆபரணங்களை விரும்பமாட்டார்கள் என்றுதான் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோயிலும், திருப்பரங்குன்றம் கோயிலும் ஒரே தேவஸ்தானத்தைச் சேர்ந்தவை என்பது அனைவருக்கும் தெரியும். வசூலிக்கப்பட்ட தொகையிலே தாய்க்குமட்டும் வைரக் கிரீடம் வைத்துவிட்டு தனயனைத் தவிக்க விடுவதின் மர்மம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதிலே எந்த மர்மமும் கிடையாது. தாய்க்குச் செய்துவிட்டு மகனுக்கும் செய்யலாம்.